# தமிழ்நாடு திறந்தநிலை பல்கலை. பட்டங்கள் செல்லும்

## ● மாணவர்களின் அச்சத்தை போக்கும் வகையில் பதிவாளர் விளக்கம்

■ சென்னை

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழக பதிவாளர் எஸ்.விஜயன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம், தமிழக அரசால் கடந்த 2003-ம் ஆண்டு தொடங்கப்பட்ட மாநிலப் பல்கலைக்கழகம் ஆகும். பல்கலைக்கழக மானியக்குழு (யுஜிசி) அங்கீகாரத்துடன் தொலைநிலைக் கல்வி முறையிலும், திறந்தநிலைக் கல்வி முறையிலும் டிப்ளமா, இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்கி வருகிறது. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் படிப்புகளில், 10-ம் வகுப்பு, பிளஸ் 2, மூன்றாண்டு பட்டப் படிப்பு என்ற முறையில் சேர்ந்து படிக்கும் மாணவர்களின் பட்டங்கள் அரசு வேலைவாய்ப்புக்குச் செல்லத்தக்கவை என்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், இளங்கலை படிப்புகளில் சேர விரும்புவோர் முறையாக இணைப்பு படிப்பில் (Bridge course) தேர்ச்சி பெற்ற பின்னரே படிக்க இயலும்.

இந்நிலையில், திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் படித்த பட்டங்கள் செல்லாது என்பதுபோல ஊடகங்களில் சமீபகாலமாக தகவல்கள் வருகின்றன. இது மாணவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம் 2003-ல் தொடங்கப்படுவதற்கு முன்பே, பல்வேறு பல்கலைக்கழகங்கள் திறந்தநிலை கல்விமுறையில் அடிப்படை கல்வித்தகுதி ஏதும் இன்றி நேரடியாக முதுகலை படிப்புகளை வழங்கி வந்தன. அதில் சேர்ந்து, பெற்ற படிப்புகள் குறித்துதான் தற்போது சில வழக்கு விவாதங்கள் எழுந்துள்ளன. இதற்கும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக படிப்புகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

- தி இந்து

# திறந்தநிலை பல்கலை பட்டம் அரசு வேலைக்கு தகுதியானது

**சென்னை, நவ. 15–**

'தமிழ்நாடு திறந்த நிலை பல்கலையில் படித்த பட்டம் செல்லும்; அரசு வேலைக்கும் தகுதி யானது' என, பல்கலை அறிவித்துள்ளது.

இது குறித்து, பல்கலையின் பதிவாளர், விஜயன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திறந்தநிலை பல்கலை, தமிழக அரசின் பல்கலையாகும். பல்கலை மானியக் குழுவான, யு.ஜி.சி., அனுமதியுடன், பட்டயம் முதல் ஆராய்ச்சி படிப்பு வரை நடத்தப்படுகிறது.

இந்த பல்கலையில், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 முடித்த பின், இளநிலை பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு, அரசு நிறுவன வேலைவாய்ப்புகளில் சேர, தகுதி உடையவர்கள் என, அரசு அறிவித்து உள்ளது.

இந்நிலையில், 'திறந்தநிலை பல்கலையில் படித்த பட்டங்கள் செல்லாது' என, எதிர்மறையான தகவல்கள் பரவுகின்றன. திறந்தநிலை பல்கலை, 2003ல் துவங்கப்பட்டது. அதற்கு முன், திறந்தநிலை கல்வி முறையில், பல பல்கலைகள், அடிப்படை கல்வித் தகுதி இன்றி, நேரடியாக, முதுநிலை படிப்புகளை வழங்கியுள்ளன.

அதில், படித்தவர்களின் படிப்பு குறித்தே, தற்போது, சில வழக்குகள் உள்ளன. திறந்தநிலை பல்கலையால் நடத்தப்படும் படிப்புக்கும், இந்த வழக்குகளுக்கும், எந்த தொடர்பும் இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

- தின மலர்

# திறந்தநிலை பல்கலைக்கழக பட்டங்கள் செல்லுமா?

## பல்கலைக்கழகம் விளக்கம்

சென்னை, நவ.14: திறந்தநிலைப் பல்கலைக் கழக பட்டம் செல்லுமா என்ற சந்தேகங்களுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்தி: திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பெறப்படும் பட்டங்கள் செல்லாது என்ற தவறான தகவல்கள் பரவி வருகிறது. பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, பட்டப் படிப்பு (10+2+3) என்ற அடிப்படையில் திறந்தநிலைப்பல்கலைக்கழகத்தில் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் பட்டங்கள், அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கு செல்லத்தக்கவை என்று அறிவித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முறையான அடிப்படைக் கல்வித் தகுதி இன்றி, நேரடியாக முதுநிலைப் படிப்பை முடித்தவர்களின் கல்வித் தகுதி குறித்தே இப்போது சில வழக்குகளில் விவாதங்கள் எழுந்துள்ளன. அதற்கும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் சார்பில் வழங்கப் படும் படிப்புகளுக்கும் தொடர்பு இல்லை.

- தினமணி